REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில்: 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5 | சென்னை: ஆனி 29உ சனி (13—7—57) ★ ★ வெளியூர்: ஆனி 30உ ஞாயிறு (14—7—57) [இதழ் 24

தஞ்சையில் வெள்ளம்—அபாய அறிவிப்பு?

காவேரிப் பிரதேசத்தில் அளவு மீறிய மழை பெய்திருப்பதாலும், எல்லா மடைகளும் திறந்திருந்தும் மேட்டூர் அணை நிரம்பி வழிவதாலும் டெல்டா பிரதேசங்களில் வெள்ளம் வரலாம் என அஞ்சப்படுகிறது. அதை ஒட்டி மக்களுக்கும் அதிகாரிகளுக்கும் அபாய அறிவிப்பு தரப்பட்டிருக்கிறது.

கொள்ளிடமும் நிறைந்து ஓடுவதாயும், அந்தப் பிரதேசத்திலும் அபாய அறிப்புத் தரப்பட்டிருப்பதாயும் கூறப்படுகிறது.

ஆபிரகாம் லிங்கனை எதிர்த்த அடிமைகள்!

அமெரிக்க வரலாற்றுச் சம்பவம் திராவிடத்திலும் நிகழ்வதேன்?

விடுதலை வேட்கை கொண்டோருக்கு ஓய்வு ஏது?

வெற்றி—மரணம்—சிறைவாசம்; இதைத் தவிர வேறெதுவும் எங்களுடைய பயணத்தை நிறுத்த முடியாது

பேரம் பேசுவோருக்கு அண்ணா தரும் விளக்கம்

" நாட்டுப் பிரிவினை விஷயத்தில் ஓய்வு என்பது இல்லை; நாட்டுப் பிரிவினை என்ற விஷயத்தில் சமரசம் என்பதில்லை; நாட்டுப் பிரிவினை என்ற விஷயத்தில் சபலம் என்பதில்லை.

" நாட்டுப் பிரிவினைக் கிளர்ச்சிகளில் ஈடுபட்டு விட்டவன் மூன்று நிலைமைகள் ஏற்பட்டாலொழிய தன்னுடைய காரியங்களை நிறுத்திக் கொள்ளமாட்டான்.

" ஒன்று—வெற்றி; மற்றொன்று—மரணம்; இன்னொன்று நீண்ட நாள் சிறைவாசம்!

" இந்த மூன்று கட்டங்கள் தவிர வேறு எந்தக் கட்டமும் எங்களுடைய காரியங்களுக்குக் குந்தகம் விளைவிக்காது என்பதை நான் எடுத்துச் சொல்லிக் கொள்கிறேன் "

—என்று அண்ணா அவர்கள், சென்னை—திருவல்லிக்கேணியில் 19-ந் தேதியன்று நடைபெற்ற கூட்டமொன்றில் கருத்துரை ஆற்றுகையில் விளக்கினர்; அவரது உரையை இரு பகுதிகளாகத் தரப்பட்டுள்ளன. மற்றொரு பகுதி 2-ம் பக்கத்தில் வெளியாகியுள்ளது.

"நாங்கள் எழுப்புகின்ற முழக்கம், நாங்கள் நடத்துகின்ற பிரச்சாரம், உடனடியாக எங்களுக்குப் பலன் தராது; பலன் தராது என்பது மாத்திரமல்ல—எங்களுக்குத் தொல்லையையும் தரும். அது மட்டுமல்ல; அரசியலில் எங்களுக்கு இலாபம் கிடைக்காது; இது அத்தனையும் எங்களுக்குத் தெரியும்.

" உடனடியான பலனும், உடனடியான அரசியல் இலாபமும் இன்றையத் தினம் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் காங்கிரஸ்காரர்களுக்குத்தான் தெரியும். என்றாலும், அவர்கள்தான் எங்களைப் பலமாக எதிர்க்கிறார்கள்; அதற்குக் காரணம் என்ன என்று என்னை நானே கேட்டுக் கொண்டேன்.

" அமெரிக்கா நாட்டில் அடிமைகளின் விலங்கை அடியோடு அறுக்க வேண்டுமென்று ஆபிரகாம் லிங்கன் ஆற்றலோடு போராடிய நேரத்தில் அவரை மும்முரமாக அடிமைகளே எதிர்த்தார்கள். ஏனென்றால், 'கையிலே இருக்கிறவிலங்கை அறுத்துவிடுகிறேன்' என்று லிங்கன் சொன்ன நேரத்தில், பக்கத்திலே இருக்கிற ஒரு கலகக்காரன் காதோடு காதாக, 'ஆபிரகாம் லிங்கன், அடிமைத்தனத்தை ஒழிக்கிறேன் என்று சொல்லுகிறான்; அடிமைத்தனத்தை ஒழித்துவிட்டால், உனக்கு ஒரு கவளம் சோற்றுக்கு வழி இருக்காது; நாடோடியாக இருக்கவேண்டி யிருக்கும்' என்று சொன்னான். அப்படிச் சொன்னவுடன், எந்த அடிமைகளின் விடுதலைக்காக ஆபிரகாம் லிங்கன் பாடுபட்டானோ, அதே லிங்கனை, அதே அடிமைகள் எதிர்த்தார்கள் என்பதை அமெரிக்க நாட்டு வரலாற்றில் நான் படித்திருக்கிறேன்.

" நான் என்னை ஆபிரகாம் லிங்கனுக்கும் நிதியமைச்சரை அடிமைக்கும் ஒப்பிடுகிறேன் என்று காங்கிரஸ்காரர்கள் வருத்தப்பட வேண்டாம். அந்தச் சம்பவத்தைக் கவனமூட்டியதற்குக் காரணம், இப்படித்தான் நாட்டில் பல நிலைமைகள் உண்டாகின்றனவே தவிர, நான் ஆபிரகாம் லிங்கன் அளவுக்கு உயர்ந்தவனுமல்ல; நிதியமைச்சர் அடிமை அளவுக்குத் தாழ்ந்தவருமல்ல!

" ஆபிரகாம் லிங்கனின் சம்பவத்தைச் சொன்னதற்குக் காரணம், இங்கே திராவிட நாட்டின் விடுதலைக்காக தி. மு. கழகம் பாடுபடும் நேரத்தில் அதனாலே யாருக்கு உடனடியாக இலாபம் கிடைக்குமோ அந்தக் காங்கிரஸ் மந்திரிகளே நம்மை எதிர்க்கிறார்கள் என்ற அந்த அளவு வரையிலேதான் அந்த உவமையே தவிர, மற்றவற்றிற்கல்ல!

" ஆகவே, அவர்கள் எதிர்ப்பது பற்றி நாம் ஆச்சரியப்படவில்லை. அவர்கள் இந்த அளவுக்கு நம்மை எதிர்க்க எதிர்க்க நாட்டில் இன்றையத் தினம் நடைபெற்றுக் கொண்டு வருகிற தி. மு. கழகத்தின் கிளர்ச்சிகளும் கூட்டங்களும் எங்களையே பிரமிப்படையும்படியாகச் செய்து வருகின்றன.

" தேர்தல் காலத்தில் நடைபெற்ற கூட்டங்களைப்போல் இப்போது ஏறக்குறைய பத்துமடங்கு அதிகமாகக் கூட்டங்கள் நடைபெறுகின்றன. நிதியமைச்சர்கூட இதை மனத்தில் வைத்துக் கொண்டுதான் சட்டசபையில் அன்று, 'தேர்தல் வருவதற்கு இன்னும் 4-ஆண்டுகள் இருக்கிறதே; இவர்களைப் பாருங்கள்; இன்னும் தேர்தல் பாணியிலேயே பேசுகிறார்கள்; கொஞ்சம் மறந்து இருங்களேன்' என்று கேட்டார் போலும்!

"நாங்கள், தேர்தலை மனதில் கொண்டு பேசவில்லை. எங்கள் நாட்டை மனதில் நினைத்துக் கொண்டு பேசினோம்"

நிர்வாகத்தில் தொழிலாளர் பங்கு

புதுடில்லி, ஜூலை 11—

"நிர்வாகத்தில் தொழிலாளர்களுக்கும் பொறுப்பைப் பகிர்ந்து தரப்பட வேண்டும் என்று கோரப்பட்டதை சோதனை செய்யும் பொருட்டு சென்னை அரசாங்கம் அரசாங்கத் துறையில் ஒரு நிறுவனத்திலும், தனியார் துறையில் ஒரு நிறுவனத்திலும் அத்திட்டத்தை அமுல் நடத்தத் தயாராக இருக்கிறது" என்று இந்தியத் தொழிலாளர் மாநாட்டில் மாநிலத் தொழில் அமைச்சர் வெங்கட்ராமன் கூறினாராம்.

இதுபற்றி அவசரக்கோலத்தில் சட்டம் இயற்றக் கூடாதென்றும் அவர் வற்புறுத்தினாராம்.

மேற்கு வங்க சட்டசபை முன் 10 ஆயிரம் அகதிகள் ஆர்ப்பாட்டம்

மேற்கு வங்க சட்டசபை முன் கூடி சுமார் 10,000 அகதிகள் ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கின்றனர்.

சட்டசபையில் விவாதிக்கப்பட்டுவரும் அகதிகள் புனரமைப்பு மசோதா ஒன்றில் சில ஷரத்துக்களுக்கு எதிராகவே அகதிகளின் இந்த ஆர்ப்பாட்டத்தை இடதுசாரிக் கட்சியினர் நடத்தியிருக்கின்றனர்.

தாங்கள் எதிர்க்கும் அந்த ஷரத்துக்கள், தங்களின் எதிர்காலத்தைப் பாதிக்கும் என்று அவர்கள் கருத்தறிவித்தனராம்.

இதற்கிடையில், அந்த மசோதாவில் சில மாற்றங்கள் செய்வதற்குச் சம்மதிப்பதாக முதன் மந்திரி டாக்டர் பி. சி. ராய், எதிர்க்கட்சித் தூதுவர்களிடம் தெரிவித்திருக்கிறாராம்.

இந்த முடிவு, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த அகதிகளுக்குத் தெரிவிக்கப்பட்டது.

அவர்கள் கலைந்துசென்றனர் என்றும் தெரியவருகிறது.

குடகனாறு கோரிக்கை 'கூடை'யில்தூங்குவதேன்?

புள்ளி விவரங்கள் பேசுகிறது—கேளீர்!

சட்டசபையில் மு. கருணாநிதி முழக்கம்

11—7—57 அன்று சென்னை சட்ட மன்றத்தில் தோழர் மு. கருணாநிதி அவர்கள், நீர்ப்பாசன மானிய வெட்டுப் பிரரேபனை மீது ஆற்றிய விளக்க உரையின் முழு விவரம் இங்கு தரப்படுகிறது:—

" குறிப்பிடப்பட்ட வெட்டுப் பிரேரணை நீர்ப்பாசன வசதியைப் பற்றியது. சென்னை மாநிலத்தில் இன்னும் எந்தெந்த வகையில் நீர்ப்பாசனம் தேவைப் படுகிறது என்பதைப் பற்றிய குறிப்புகளை இங்கே தருவதற்கு ஆசைப்படுகிறேன்.

" இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்தியத் துணைக் கண்டத்தில் நீர்ப்பாசன வசதிகளால் பயன்பெறும் நிலப்பரப்பு இன்னும் எவ்வளவு அதிகமாகும் என்ற புள்ளி விவரங்களை நாம் ஒரு முறை காண்பது மிக மிக நலம் என்று கருதுகிறேன்.

"வடநாட்டிலே இருக்கின்ற மாகாணங்களில் நீர்ப்பாசன திட்டங்களால் பயன் பெறுகின்ற நிலத்தினுடைய பரப்பு மேலும் எவ்வளவு அதிகரிக்கிறது என்பதையும், நம்முடைய சென்னை மாநிலத்தில் இத்திட்டங்களால் மேலும் பயன் பெறக்கூடிய பரப்பையும் இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

" இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நீர்ப்பாசனத் திட்டங்களால் பஞ்சாப் மாகாணத்தில் 17இலட்சம் ஏக்க்ரா நிலப்பரப்பு மேலும் அதிகமாகப் பயன்பெறப் போகிறது. ஒரிசா மாகாணத்தில் 16 இலட்சம் ஏக்கரா நிலப்பரப்பு மேலும் அதிகமாகப் பயன் பெறப் போகிறது.

	ஏக்கர்
உத்தரப்பிரதேசத்தில்	13,10,000
மேற்கு வங்கத்தில்	12,70,000
இராஜஸ்தானில்	11,60 000
பீகாரில்	11,40,000
பம்பாயில்	10,00,000
மத்திய பிரதேசத்தில்	4,00.000
ஆந்திராவில்	2,90,000

" பரிதாபத்திற்குரிய நம் சென்னை மாநிலத்தில் 1,40,000 ஏகராதான் அதிகப்படியாக இந்த நீர்ப்பாசன வசதிகளால் பயன்படப் போகிறது என்பது இந்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட புள்ளி விவரங்களிலிருந்து நமக்குத் தெரியவருகிறது.

"புள்ளி விவரத்தையொட்டி பேசவேண்டும் என்று கூறப்பட்ட காரணத்தால், வெறும் 'வடக்கு வாழ்கிறது—தெற்கு தேய்கிறது,' என்பதைமட்டும் சொல்லாமல், புள்ளி விவரங்களையும் குறிப்புகளையும் நான் அமைச்சர் அவர்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

"மத்திய சர்க்கார், சென்னை மாநிலத்தில் ஆற்று நீர் மேட்டுப் பகுதிகளிலும் பயன்படவேண்டும் என்பதற்காக 'ஆற்று நீர் இறைப்புத் திட்டம்' என்ற ஒரு திட்டம் 1951—52-ம் ஆண்டில் அமுலாக்கப்பட்டு, அதற்காக மத்திய சர்க்கார் 50 சதவிகிதம் மானியம் தருவதாக ஒப்புக் கொண்டார்கள். அப்படி தரப்பட்ட மானியத்தை 1953ம்ஆண்டு நிறுத்திவிட்டக் காரணத்தால், அந்த ஆற்று நீர் இறைப்புத் திட்டத்தை சென்னை மாநில சர்க்கார் நிறைவேற்ற முடியாமல், சிறிது சிறிதாகக் குறைக்கப்பட்டு, இறுதியில் பரிபூரணமாக நிறுத்தப்பட்டு விட்டது என்பதை மறக்க முடியாது. அந்த ஆற்று நீர் இறைப்புத் திட்டம் இல்லாததால், 'பம்ப் செட்டு'கள் பொருத்தி, மேட்டுப் பகுதியில் வளப்படுத்தப்படும் வசதி ஏற்படாமல் போகின்றது என்பதை இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியாது.

" சென்னை மாநிலத்தில் நீர்ப்பாசனத் திட்டங்கள் அதிகமாக இல்லை என்பதற்குச் சொல்லப்

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

சென்னை 13—7—57 சனி

தென்னக அரிசி மண்டலம்

சென்னை, ஆந்திரம், மைசூர், கேரளம் ஆகிய நான்கு தென் மாநிலங்களையும் ஒன்றுசேர்த்து தென்னக அரிசித் மண்டலம் எனப் பெயரிய அமைப்பு ஒன்றை இந்தியப் பேரரசு உருவாக்கி இருக்கிறது. தங்களுக்குள்ளாக அரிசி தேவையைப் பூர்த்தி செய்துகொள்வதே மேற்படி அமைப்பின் சிறப்புப் பணியாகும்.

இப்புதிய தென்னக அரிசி மண்டல அமைப்பில் இடம் பெற்றுள்ள ஆந்திரம் நீங்கலாக, கேரளம், மைசூர், சென்னை ஆகிய மூன்று மாநிலங்களும் மூல உணவு உற்பத்தியில் பற்றுக்குறைகள் ஆகும். அப்பற்றுக்குறையில் கேரளம் முதன்மையான இடத்தில் இருக்கின்றது அதுபோன்றேகுறிப்பிடத் தகுந்தவகையில் உபரியான உணவு உற்பத்தியில் ஆந்திரம் முன்னணியில் இருக்கிறது.

தென்னக அரிசி மண்டலத்தில் இணைந்துள்ள நான்கு மாநிலங்களும், தனித்தனியாக மூல உணவுப் பொருளில் பற்றுக்குறையாகவோ உபரியாகவோ இருந்தபோதிலும், மொத்தத்தில் மதிப்பிடும் பொழுது உணவுத் துறையில் தன்னிறைவு கொண்டிருப்பதாகும். தனது அரிசித் தேவைக்காக, பிறர் தயவுக்குக் காத்திருக்க வேண்டிய கட்டாயம் இந்த மண்டலத்துக்கு இருக்கவில்லை.

இதுவரையில் ஆந்திரம் தன்னிடமிருந்து உபரி அரிசியை வங்காளம், சவுராட்டிரம், பம்பாய் ஆகிய மாநிலங்களுக்கு அதிக விலைக்கு விற்றுவந்திருக்கின்றது. இப்புதிய மண்டல ஏற்பாடு, அவ்வேற்றுமதியைக் குறைந்தபட்சமாகக் கட்டுப்படுத்துகிறது.

தம் விருப்பப்படி ஏற்கனவே அதிக விலைக்கு மிகுதியான அரிசியை வடநாட்டிற்கு ஏற்றுமதி செய்வதன் மூலம அதிக வருமானம் பெற்றுவந்த ஆந்திரத்திற்கு மேற்படி அரிசி மண்டல ஏற்பாட்டில் குறைந்தபட்சமாவது திருப்தி இல்லாதிருப்பது எதிர்பார்க்கக்கூடியதே. அதுபோன்றே, புதிய மண்டல அமைப்பின் காரணமாக, தனது அரிசித் தேவை முழு அளவில் நிறைவு பெறக்கூடும் என்ற எண்ணத்தில் கேரளம் முழு திருப்தி கொள்ளக்கூடும் என்பதிலும் வியப்பில்லை.

தென்னக அரிசி மண்டலத்தில் இடம் பெற்றுள்ள நான்கு மாநிலங்களுக்கிடையிலும்அரிசி போக்குவரத்து எப்பொழுதும்போல் இனியும் நடைபெற எந்தவிதத் தடையுமிருக்காது. ஆனல் இம்மண்டலத்திலிருந்து பிற மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்வதோ அல்லது மற்ற மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்வதோ இனி கூடாது.

தனது தேவைக்குப் போக ஆந்திராவில் ஆறு இலட்சம் டன் அரிசி மிகுதியாக இருக்கக் கூடும் எனமதிப்பிடப்படுகிறது. மற்ற மூன்று மாநிலங்களின் மொத்தப் பற்றுக்குறை நான்கு இலட்சம் டன் என்றும் கணக்கிடப்படுகிறது. எனவே, தம்மிடம் மீதமாக இருக்கும் இரண்டு இலட்சம் டன் அரிசியை பங்கீடு முறையில் முறையே பம்பாய்க்கும்,மேற்கு வங்காளத்திற்கும் ஏற்றுமதி செய்ய ஆந்திரத்திற்கு உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது.

ஆந்திராவிலிருந்தும், தஞ்சையிலிருந்தும் உள்ள நாட்டுப் புழுங்கல் அரிசியை கேரளம் கொள்முதல் செய்ய உரிமை இருக்கிறது. அதுபோன்றே, நெல்லூர் உயர்ந்தரக அரிசி தேவையான அளவு சென்னையில் கிடைக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தென்னகத்தின் அரிசி தேவையை இம்மண்டல அமைப்பின் மூலம் பூர்த்தி செய்துவிடக்கூடும் என்பது இந்தியப் பேரரசின் கருத்தாக இருக்கிறது. அக்கருத்து, மேற்படி மண்டல அமைப்பின் மூலம் நிறைவேறினுலும் நிறைவேறக்கூடும்.

தென்னகத்தின் அரிசி பற்றுக்குறையைப் போக்குவதற்கு ஏதேதோ முறைகளை அரைமனதுடன் கையாண்டு பார்த்துவிட்ட பிறகு, ஒரு மண்டலக் குழு அமைப்பதின் மூலமாவது பிரச்சினைக்குப் பரிகாரம் காண முடியாதா என்ற நினைப்பில் மேற்படி மண்டல அமைப்பை உருவாக்கி இருக்கின்றது என்றே நாம் எண்ணுகிறோம். எனவே, அதன் வெற்றி தோல்வியைப் பொறுத்திருந்துதான் முடிவுகட்ட வேண்டும்.

இம்மண்டல அமைப்பின் வெற்றி தோல்வி குறித்து நம்மைப்போலவே எவரும் ஐயப்படத்தான் செய்வர். உணவுப் பண்ட உற்பத்தி — தேவை குறித்து இந்தியப் பேரரசு சார்பில் இதுவரை கூறம்பட்டுவந்துள்ள முரண்படும் புள்ளிவிவரங்களை அறிந்திருப்பவர் எவருக்கும் மேற்குறிப்பிட்ட வகையில் ஐயுறுவதைத்தவிர வேறு வழியே இல்லை.

ஆந்திரத்தில் உபரியாக இருக்கக்கூடிய அரிசியின் அளவு குறித்தும், மண்டலத்தில் உறுப்பாக உள்ள மற்ற மாநிலங்களின் அரிசி பற்றுக்குறைஅளவு குறித்தும் குறிப்பிடப்படும் புள்ளிவிவரங்களை முழு நம்பிக்கையுடன் நம்மால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. கேரளத்தின் அரிசிப் பற்றுக்குறையை மூன்று இலட்சம் டன் என்று கேரள உணவு அமைச்சர் குறிப்பிட்டிருக்கின்றார். ஆனல் அதற்கு மாறாக, பேரரசின் உணவு அமைச்சரோ கேரளத்தின் அரிசி பற்றுக்குறை இரண்டரை இலட்சம் டன்தான் என்று அறிவித்துள்ளார்.

இம்மதிப்பீட்டின் முறைப்படியேதான் ஆந்திராவின் உபரி அரிசியின் மதிப்பீடும் இருக்காது என எப்படி நம்புவது?

‘ஒன்றுபட்டு எழுப்பிய குரலுக்கு டெல்லி தந்த மதிப்பு என்ன?’

‘கூரை ஏறி கோழி பிடிக்காதவர் கோபுரம் ஏறி வைகுந்தம் காட்டுவாரா?

பேரம் பேசும் நிதி அமைச்சருக்கு அண்ணு எழுப்பும் கேள்விகள்

“அல்ஜீரிய மக்கள் எந்த விடுதலை என்ற காரியத்தை வெடிகுண்டுகளை வீசி சாதிக்கின்றர்களோ, அதே காரியத்தை நாம் வெடிகுண்டு இல்லாமலேயே—பலாத்காரம் இல்லாமலேயே—நாட்டிலே அமளியை மூட்டாமலேயே—அறிவை வளர்ப்பதின் மூலமாகவே சாதிக்கலாமென்று அழுத்தமாக நம்பிக்கைக் கொண்டிருக்கின்றோம். அப்படி அழுத்தமாக நாம் நம்பிக் கொண்டிருப்பதற்குக் காரணம், ஆட்சியாளர்கள் மீதுள்ள நம்பிக்கைதான் என்று சொன்னுல், அவர்கள் பெருமைப்பட வேண்டும்.

“பிற பிற ஏகாதிபத்தியவாதிகள் வெடிகுண்டுகளின் மூலமாகத்தான் நியாயத்தை உணர்ந்தார்கள்; ஆனுல், இன்றையத் தினம் நம்மை ஆட்டிப்படைக்கின்றவர்கள் அறிவுத் தெளிவு பெற்று நம்முடைய உரிமைகளைத் தருவார்கள் என்று நமக்கு நம்பிக்கை இருக்கின்றது இதை விளக்குகின்ற வகையில் உண்மையிலேயே பல்வேறு சம்பவங்கள் நாட்டிலே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.”

—என்று அண்ணு அவர்கள், 9-7-57-ல், சென்னை-திருவல்லிக்கேணி (42-வது வட்டம்) இளைஞர் முன்னேற்றக் கழகத் திறப்பு விழாவில் ஆற்றிய கருத்துரையில் குறிப்பிட்டார்; தொடர்ந்து அவர் பேசியதாவது:—

“நிதியமைச்சர் சுப்பிரமணியம் ‘ஒரு 10 வருடத்திற்கு நீங்கள் இந்தப் பிளவுப் பேச்சு பேசாமல் இருங்கள்; தமிழ் நாட்டை நாம் எல்லோருமாகச் சேர்ந்து வளர்க்கலாம்; தமிழ் நாட்டிலே நல்ல தொழில்களை உண்டாக்கலாம்; கனரகத் தொழிற்சாலைகளை ஆங்காங்கே ஏற்படுத்தலாம்; செல்வம் வளரும்—தரித்திரம் ஒழியும்—மக்களுக்கு நிம்மதி ஏற்படும்; இந்த 10 வருடத்திற்குப் பிறகும் இவைகளெல்லாம் ஏற்படவில்லை என்று தெரிந்தால்-அதற்குக் காரணம் வடநாட்டார்தான் என்று தெரிந்தால், நீங்களென்ன — நானும் உங்கள்கூட சண்டையிலே சேர்ந்துவிடுகின்றேன்; அதுவரையில் பொறுத்திருங்கள்!’ —என்ருர்.

“இதுவரையிலே காங்கிரசிலுள்ள தலைவர்கள் — இந்த போராட்டமே கூடாதென்று சொன்னவர்கள்—‘ஒரு 10 வருடத்திற்குப் பார்க்கலாம்’—என்று சொன்ஞர்களே, அதுவரையிலே நான் திருப்தி அடைகின்றேன். ‘அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்’ என்கிருர்கள்—‘அமைச்சர்கள் கூட நகருகிருர்கள்’ என்பதை, இந்த ‘10 வருடம்’ எடுத்துக்காட்டுகின்றது.

“எனவே, ‘10 வருடத்திற்குப் பொறுத்திருங்கள்,’ என்று சொல்லுகிற நிதியமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்தில் ஒன்றைமட்டும் கவனப்படுத்துவேன்; இன்றையத் தினம் காங்கிரஸ் கட்சிக்கு ஈடு—எதிர்ப்பு எங்கேயும் இல்லை. நாளைய தினம் நாங்கள் விரும்பினுலும், காங்கிரஸ் மந்திரிகளைக் கவிழ்த்துவிட்டு மந்திரிகளாகிவிட முடியாது. நாங்கள் மட்டுமல்ல—எதிர்க்கட்சியிலே இருக்கிற அத்தனைபேரும் சேர்ந்தாலும் முடியாது; நாங்கள் 50 பேர்; காங்கிரஸ் கட்சியிலே 150 பேர்; ஆகையினுல் மந்திரி சபைக்கு ஒரு ஆபத்துமில்லை—பதவிக்கு ஒரு ஆபத்துமில்லை என்பதை நிதி அமைச்சர் சுப்பிரமணியம் மனதார நம்பிக்கொண்டிருக்கலாம்.

“ஆனுல், அவர்கள் கேட்டுக்கொள்ளுகிறபடி 10 வருட காலம் காத்துக்கொண்டிருக்க வேண்டுமென்ருல், இவர்கள் இந்த 10 வருட காலத்திலாவது வடநாட்டாரிடத்திலே நேருக்கு நேராக நின்று நியாயத்தைக் கேட்டு, உரிமைகளுக்காக சண்டை பிடிப்பார்களா என்று பார்த்தால் இதுவரையிலே இல்லை. இப்படி இவர்கள் போட்ட சண்டையிலாவது வெற்றி பெற்ருர்களா என்ருல், மூன்று விஷயத்திலே தோல்வியடைந்திருக்கின்ருர்கள். அதைமட்டும் இன்றையக் கூட்டத்திலே கவனப்படுத்துவேன்.

“ஒன்று - தேவிகுளம்-பீர்மேடு பிரச்சினையில் எல்லாக் கட்சிகளும் காங்கிரஸ் கட்சிக்குத் துணை நின்றன. இந்த நாட்டில், அப்பிரச்சினையைப் பொறுத்தவரையில் எந்தக் கட்சிக்கும் பிளவு இல்லை. பக்கத்திலே இருக்கிற கடற்கரையிலேதான் நீதிக் கட்சித் தலைவர் பி. டி. இராசன் தலைமையில் எல்லாக் கட்சித் தலைவர்களும் ஒன்று கூடி, ‘தேவிகுளம்-பீர்மேடு தமிழர்களுக்குத்தான் சொந்தம்,’ என்று எடுத்துக்காட்டினேம். அன்று சிறு பெட்டிக் கடைகூட திறக்கப்படவில்லை; பரிபூரண அர்த்தால் நடைபெற்றது. இந்தியத் துணைக் கண்டத்திலே உள்ளவர்களெல்லாம் ஆச்சரியப்படத்தக்கவகையிலே, ஒரு துளியும் கலவரத்துக்கு இடமளிக்காமல் அன்றையத் தினம் பரிபூரண அர்த்தால் செய்யப்பட்டது. இதைவிட அரசியல் கட்சிகளுக்குள்ளே உள்ள ஒற்றுமையை எப்படிக் காட்ட முடியும்?—எப்பொழுது காட்ட முடியும்? ஆனுல் அதற்குக் கிடைத்த பலன் என்ன? தேவிகுளம்-பீர்மேடு நமக்குக் கிடைத்ததா? ‘எல்லா அரசியல் கட்சிகளும் இந்த ஒரு பிரச்சினையிலே, அது ஒரு தேசிய பிரச்சினையென ஒன்றுபட்டு நிற்கிருர்கள்’ என்று எடுத்துச் சொல்லி நிதியமைச்சர் சுப்பிரமணியம் டெல்லியிடத்திலே வாதாடி, நமக்குத் தேவிகுளம் — பீர்மேடு பகுதிகளைப் பெற்றுக் கொடுத்திருப்பாராஞல் ‘கூரையேறி கோழியை’ப் பிடித்திருப்பாராஞல், இவர், ‘கோபுரமேறி வைகுந்தத்துக்கு வழி காட்டமுடியும்’ என்று நாம் நம்ப முடியும். இவ்வாறு ஒற்றுமையை காட்டிய பிறகும், ‘டெல்லி சொல்லிவிட்டது’ என்று அப்படியே அந்தப் பகுதிகளைக் கேரளத்துக்குக் கொடுத்துவிட்ட இவரை எப்படி நம்புவது?

“மற்றும் ஒன்றிலே, எல்லாக் கட்சிகளும் ஒன்ருகச் சேர்ந்து—காங்கிரஸ் கட்சியும் ஒன்ருகச் சேர்ந்து, ஆச்சாரியார் முதல் மந்திரியாக இருந்த காலத்தில், ‘கைத்தறியாளர் கண்ணீரைத் துடைக்கப்பட வேண்டும்’ என்ற கண்ணியமான பிரச்சினையில், ‘கரைபோட்ட வேட்டி—சேலைகளை ஆலைகள் தயாரிக்கக்கூடாது; கைத்தறிக்கே ஒதுக்கவேண்டும்’ —என்ற பிரச்சினையில் ஆச்சாரியாரும் சேர்ந்து வாதாடினுர். அப்பொழுதிருந்த அத்தனைக் கட்சிகளும்—அத்தனை உறுப்பினர்களும் சேர்ந்துதான் அந்தத் தீர்மானத்தை டெல்லிக்கு அனுப்பினுர்கள். ஆனுல் என்ன நடந்தது? அந்தத் தீர்மானத்தை டெல்லியிலுள்ளவர்கள் பார்த்து-மந்திரியும் பார்த்து கலகலவென சிரித்து, அப்படியே கிழித்துக் குப்பைக் கூடையிலே போட்டார்களே! ‘10 வருடம் சண்டை நின்றுவிட்டால் வடநாட்டார் மதித்துவிடுவார்கள்’ என்று நிதியமைச்சர் நம்புவதற்கு அந்த இரண்டாம் காரணம் இடந்தரவில்லையே!

“மூன்ருவது காரணம், நாங்கள்கூட அல்ல—நிதியமைச்சர் சுப்பிரமணியமே மெத்த பயபக்தி விசுவாசத்தோடு வடநாட்டு சர்க்காரை அணுகி—நேரு பண்டிதரின் எதிரிலே நின்று, நீட்டோலை வாசித்து, ‘இந்த நாட்டுக்கு ஒரு 400 கோடி ரூபாய் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே ஒதுக்க வேண்டும்’ என்று கேட்டுக் கொண்டார். கேட்டுக் கொண்ட நேரத்திலே, முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழ் நாடு புறக்கணிக்கப்பட்டதை நிதியமைச்சர் சுப்பிரமணியம் கவனப்படுத்தியிருக்கக்கூடும். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏறக்குறைய ரூ. 6,000 கோடி ஒதுக்கியிருப்பதையும் அவர் கவனப்படுத்தியிருக்கக்கூடும். இவ்வளவையும் செய்து ரூ. 400 கோடி கேட்டாரே—கிடைத்ததா? கேட்டது ரூ 400 கோடி! கிடைத்தது 170 கோடி—ஏட்டில்! கிடைக்க இருப்பது ரூ. 150 கோடி என்கிருர்கள்! அது நாளா வட்டத்திலே ரூ. 130 கோடியாகக் குறையக்கூடும் என்றும் அரசியல் வட்டாரங்கள் பேசிக்கொள்கின்றன!

“இந்த மூன்று காரியங்களில் அத்தனை பேரும் ஒன்ருக இருந்து மல்லுக்கு நின்று பார்த்தோமே என்ன நடந்தது? இந்த மூன்றிலே அடைய முடியாத வெற்றியை நிதியமைச்சர் சுப்பிரமணியம், எப்பொழுது அடையம்போகின்ருர்?—இந்த 10 ஆண்டு என்பது — எங்களுடைய வாயையும் மூடி, இவருடைய கைகளையும் கட்டி, இன்னும் ஒரு 10 ஆண்டுக்காலத்திற்கு வடநாட்டான் ‘லைசென்ஸ்’ பெற்று கொள்ளையடிக்கத்தான் பயன்படுமே தவிர, வேறொன்றுமில்லை; இல்லையெனில், எந்த வகையிலே நாட்டுக்கு நன்மை தரும்?

“எனவேதான், 10 வருட காலம் சும்மாயிருக்கவேண்டுமென்று நிதியமைச்சர் சுப்பிரமணியம் கேட்டுக்கோண்டது எனக்தும், நான் சார்ந்துள்ள கட்சிக்கும் பெருமை தருவதுதான் என்ருலும், அந்தப் பெருமை என்ற மயக்கத்திலே எங்களுடைய கொள்கையை இழந்துவிடுவதற்கு நான் தயாராக இல்லை.

“நிதியமைச்சர் சுப்பிரமணியத்திற்கு, வெளியிலே நாம் எந்த அளவுக்குக் கூச்சலிடுகிறோமோ, அந்த அளவுக்குத்தான் டெல்லியிலே மதிப்பு இருக்கும். அதை நிதியமைச்சர் தெரிந்து

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

கொள்ளவேண்டும். ஆகவே, நாட்டிலே நாங்கள் எடுத்துச் சொல்லிவருகின்ற இந்த விஷயங்கள்தான் உண்மையிலேயே காங்கிரஸ் அமைச்சர்களின் கரங்களுக்கு வலுவை உண்டாக்கும்.”

ஆகஸ்டு 9-ந் தேதி முதல் தபால் ஊழியர்கள் வேலைநிறுத்தம்

இரண்டொரு நாளில் சர்க்காருக்கு நோட்டீஸ்

புதுடில்லி, ஜூலை 10—

வரும் ஆகஸ்டு 9-ந் தேதியன்றுமுதல் தங்களின் நியாயமான கோரிக்கைகளுக்காக தபால்-தந்தி இலாகா ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்வர் என்று ஊழியர் சங்க பொதுக்குழு முடிவு செய்திருக்கின்றது.

வேலை நிறுத்தம்பற்றி சர்க்காருக்கு இன்னும் இரண்டொரு நாட்களில் 'நோட்டீஸ்' கொடுக்கப்படும் என்றும் தெரிகிறது.

தபால் ஊழியர்களில் மூன்றும்-நான்காம் பிரிவினர் இந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவர்; அதாவது, தபால்-தந்தி அலுவலகக் குமாஸ்தாக்கள், கணக்காயர்கள், கடிதம் பிரிப்போர், தபால்காரர்கள் முதலியோர் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவர்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாகவே ஊழியர் சங்கம் 30 அம்சங்களடங்கிய கோரிக்கைமனுவை சர்க்காரிடம் தந்திருந்தும் இது வரையில் பலன் ஏதும் இருக்கவில்லை.

கோரிக்கைகளில் பிரதானமானவை, 'இரண்டாவது சம்பளக் கமிஷன் வேண்டும்; இடைக்கால கிராக்கிப்படி உயர்வு வேண்டும்; கிராக்கிப்படியை அடிப்படைச் சம்பளத்தோடு இணைத்துத் தர வேண்டும்' என்பவையாகும்.

தங்களின் இதர கோரிக்கைகள் பற்றி பரிசீலிக்க ஒரு மத்தியஸ்தரை நியமிக்க வேண்டும் என்றும் சங்கம் கோரியுள்ளது.

இந்தியாவெங்கணுமுள்ள 2,77,000 ஊழியர்களில் சுமார் 80 சதவிகிதத்தினர் சங்கத்திலிருக்கின்றனர். என்றும் கூறப்படுகிறது.

பெண்களுக்குப் போலீஸ் பதவி தேவையா?

மகளிர் மன்ற ருசிகர வாதம்

சென்னை, ஜுன் 8—

5—7—57 மாலை 6 மணிக்கு மகளிர் மன்ற அலுவலகத்தில், 'பெண்களுக்குப் போலீஸ் பதவி அவசியமா' என்ற பொருள்மீது சொற்போர் நடைபெற்றது.

தோழியர் பேச்சியம்மாள்—பொன்னுசாமி தலைமை தாங்கினார்.

'பதவி அவசியமில்லை' என்று தோழியர்கள் வெற்றிச்செல்வி-அன்பழகன், சுந்தராம்பாள் இளஞ்செழியன், அம்மா பெண்ணு ஆறுமுகம், சகுந்தலா, ஜெயா ஆகியவர்கள் முறையே 'போலீஸ் பதவிக்குப் பெண்கள் தகுதியில்லை' என்றும், 'பெண்கள் ஆசிரியர்களாக—டாக்டர்களாக திறம்பட பணியாற்ற முடியும்,' என்றும், 'பெண்கள் மெல்லியர்கள்; வலிமையான போலீஸ் பணியாற்ற தகுதிபடைத்தவர்களல்ல; சமுதாயமே முன்னேறாத இந்த நாட்டில் இப்போது இந்த போலீஸ் பதவி பெண்களுக்குத் தேவையில்லை, என்றும், 'பெண்கள் இளகிய மனம் படைத்தவர்கள்; இரத்தம் சிந்தும் சண்டைச் சச்சரவுகளில் ஈடுபட நேர்ந்தால் குழப்பமடைவார்கள்' என்றும், 'பஸ்களில் பெண்கள் பல பதவிகளில் ஈடுபடும் திட்டம் தோல்வியுற்றது,' என்றும், 'திருடர்களைத் துணிந்து சிறை செய்ய முடியாது' என்றும், இயற்கை உடற்கூறு, பெண்களை போலீஸ் பதவிக்கு—உயர்ந்த அதிகாரியானாலும் கீழ்த்தர சிப்பந்தியானாலும்—தகுதியற்றவராகச் செய்கிறது' என்றும், பல கருத்துக்களை தெளிவாகவும் விளக்கமாகவும் பேசினர்.

'பதவி அவசியம்' என்று வலியுறுத்தி தோழியர்கள் ஜி. சுசீலா தேவியும், என். நித்தியாவும் பேசினார்கள். அவர்கள், பெண்கள் நாட்டின் பொதுப் போராட்டங்களில் ஈடுபட்டால் ஆண் போலீஸ்காரர்கள் தாக்க வருகிறார்கள் என்றும், பெண்களுக்கு பாதுகாப்பளிக்க பெண் போலீஸ் அவசியம் என்றும், எல்லா துறையிலும் ஆண்களோடு போட்டியிடுகிற பெண்கள் போலீஸ் இலாகாவில் இடம்பெற வேண்டும்—நமது திறமையைக் காட்டமுடியும்' என்றும் ஆதாரங்களோடு பேசினர்.

பெரும்பான்மையானவர்கள் அவசியமில்லை என்று பேசியதால் 'பெண்களுக்கு போலீஸ் பதவி அவசியமில்லை,' என்று பலத்த கையொலிக்கிடையே தீர்மானிக்கப்பட்டது.

★

ஊழியர்களை மிரட்டுகிறார் ஒரு மந்திரி!

தபால் இலாகா மந்திரி 'பேச்சுவார்த்தை நடத்துவோம்' என்கிறார்

புதுடில்லி, ஜூலை 11—

மத்திய தொழிலாளர் இலாகா மந்திரி ஜி. எல். நந்தா, தபால்-தந்தி ஊழியர், மற்றும் துறைமுகத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்யப்போவதாக அறிவித்திருப்பதைக் கண்டித்திருக்கிறாராம்!

இந்த அறிவிப்புகள் மக்களிடத்தில் பெருங்கவலையையும் பீதியையும் தோற்றுவித்திருக்கின்றன என்றும், இந்தச் சம்பவங்கள் நடைபெறுமானால் அவற்றிற்கு காரணமானவர்கள் மக்களுக்குப் பதில் சொல்லவேண்டிவரும் என்றும், அவர்கள் மக்களின் அனுதாபத்தை இழந்துவிடுவர் என்றும் மிரட்டியுள்ளார் என்று தெரியவருகிறது.

இதற்கிடையில் தபால்-தந்தி இலாகா மந்திரி லால்பகதூர் சாஸ்திரி, ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்யப்போவதாக அறிவித்திருந்தாலும், தான் அவர்களுடன் அவர்களது கோரிக்கைகள் பற்றி நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இருப்பதாக அறிவித்திருக்கிறார்.

அதே நேரத்தில், தபால் ஊழியர் சங்கத் தலைவர் வி. ஜி. தால்வி தாங்களாக நேரடிப் பேச்சுவார்த்தை வேண்டுமெனக் கேட்கப்போவதில்லை என்றும், சர்க்கார் அப்படிப் பேச்சுவார்த்தை நடத்தலாம் என எங்களை அழைத்தால் எங்கள் சங்கம் அந்த அழைப்பு குறித்துப் பரிசீலனை நடத்தும் என்றும் பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிறார்.

சென்னை உயர்நீதி மன்றம்

மேலும் ஒரு நீதிபதி நியமனம்

சென்னை, ஜூலை 11—

சென்னை உயர்நீதி மன்றத்திற்கு மேலும் ஒரு நீதிபதி நியமிக்கப்படுவார் என்று தெரியவருகிறது.

இத்தகவலை, மத்திய உள்நாட்டு மந்திரி பண்டித பந்த் வெளியிட்டிருக்கிறார்.

மேலும் நீதிபதிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுமா என்பது பற்றிக் கேட்கப்பட்டபோது, 'எனக்குத் தெரியாது; வேண்டுமானால், அது குறித்து, பிரதம நீதிபதியும், முதன் மந்திரியும் சிந்திக்கக்கூடும்; என்று கூறியிருக்கிறார்.

வேண்டுகோள்

"சில நண்பர்கள் பொதுக்கூட்டத்திற்கென்று தேதியைப் பெற்றுக் கொண்டு, அந்த நாளில் காலை 9 மணிமுதல் மாலை பொதுக்கூட்டம் தொடங்குகின்ற வரையில், பக்கத்திலுள்ள சில ஊர்களையும் சேர்த்துக் கொண்டு பல நிகழ்ச்சிகளை நமக்கு முன்னதாகவே அறிவிக்காமல் ஏற்பாடு செய்துவிட்டு, கடைசியில்தான் இதை அறிவிக்கிறார்கள்.

"இதனால், முன்னர் கூட்டத்தை வெற்றிகரமாக முடிக்க முடியாமலும், பிரயாண தொல்லைகள் கூடுதலாகவும் ஏற்படுகிறது.

"ஆகவே, அப்படி ஏற்பாடு செய்கின்ற தோழர்கள் முன்கூட்டி தெரிவிக்காமல் ஏற்பாடு செய்கிற எந்த நிகழ்ச்சியிலும் கலந்துக் கொள்ள இயலாதென்பதையும், ஒரே நாளில், இருக்கின்ற எல்லா நிகழ்ச்சியையும் முன்கூட்டியே தெரிவித்தால் அதற்கேற்றபடி முன்னர் நிகழ்ச்சியையும் பிரயாண வசதியையும் சரி செய்துக் கொள்ள வசதியாக இருக்குமென்று கேட்டுக் கொள்கின்றேன்"

அன்பன்
சி. பி. சிற்றரசு

மந்திரிகளின் பெயர்ப் பலகைகள் பெயர்த்தெறியப்பட்டன

பஞ்சாப் சர்க்கார் அலுவலகத்தில் இந்திவெறியர்கள் அட்டகாசம்

சந்திகர், ஜூலை 10—

பஞ்சாபில் இந்திக்கு, அளவு மீறிய ஆதிக்கம்கோரி ஆரிய சமாஜிகள் நடத்தும் ஆர்ப்பாட்டம் இன்று ஒரு ஆபாசமான கட்டத்திற்குச் சென்றுவிட்டது.

பஞ்சாப் மாநில சர்க்கார் அலுவலகத்தின் முன் 'சத்தியாக்கிரகம்' செய்வதாகக் கூடிகின்ற அந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் போலீசாரையும் மீறி, முள்கம்பி வேலியையும் தாண்டிக் குதித்து அலுவலக மாளிகைக்குள் புகுந்து அட்டகாசங்களில் தாராளமாக ஈடுபட்டனர் என்று தெரிகிறது.

அவர்கள், மந்திரிகள்—அதிகாரிகள் ஆகியோரின் அறைகளின் முன் தொங்கும் பெயர்ப் பலகைகளைப் பெயர்த்து எறிந்தனராம்!

சுமார் ஒரு மணி நேரம்வரை சர்க்கார் அலுவலகம், இந்த ஆர்ப்பாட்டக்காரர்களின் 'ஆளுகை'க்கு உட்பட்டுக் கிடந்ததாம்!

போலீசார் ஏதும் செய்யாதவர்களாய், இந்த அட்டகாசங்களை அந்த ஒரு மணி நேரமும் பார்த்துக் கொண்டிருந்தனராம்!

போலீசாரின் எண்ணிக்கை ஒரு மணி நேரத்திற்குப் பிறகுதான் அதிகரிக்கப்பட்டதாம். அதன் பிறகே இந்த ஆர்ப்பாட்டக்காரர்களைச் சுற்றி வளைத்து, அவர்களைப் பெரும் கஷ்டத்திற்கிடையே போலீஸ் வண்டிகளில் ஏற்றிச் சென்றனராம்.

சுமார் 20 பேர் மீதுதான் போலீசார் நடவடிக்கை எடுத்தனர் என்று கூறப்படுகிறது.

பெரியார் படம்

பள்ளியில் வைக்க அனுமதி

சேலம்; ஜூலை 9—

நாகரசம்பட்டி திராவிட கழகத்தார் கட்டியுள்ள பள்ளிக்கூட கட்டிடத்தை அவர்கள் நன்கொடையாகக் கொடுப்பதை நன்றியுடன் ஏற்றுக்கொள்ள சேலம் மாவட்ட ஆட்சி மன்றத்தில் முடிவு செய்யப்பட்டது.

மேற்படி பள்ளிக்கூட கட்டிடத்தில் இருக்கும் பெரியார் அவர்களின் படத்தையும் வைத்துக் கொள்ள அரசாங்கத்தினர் அனுமதி அளித்துள்ளனர். (ந. கி.)

காலம் கடந்த முயற்சி!

பெங்களூர், ஜூலை 11—

குன்னூரில் உள்ள 'இன்புளுயன்சா' தடுப்பு மருந்து உற்பத்தி நிலையம் செயல்படத் துவங்கியுள்ளது.

பெங்களூரில் உள்ள அரசாங்கப் பண்ணையிலிருந்து வாரந்தோறும் 500 முட்டைகள் குன்னூருக்கு அனுப்பப்படுகிறதாம். இதிலிருந்து தடுப்பு மருந்து தயாரிக்க முயற்சிகள் நடைபெறுகின்றனவாம்

'மேட்டூர் வாய்க்கால் பிரதேசத்தில் இருபோகமும் விளைவிக்க அனுமதி தரவும்'

சேலம் மாவட்ட ஆட்சி மன்றத்தில் தி. மு. கழக உறுப்பினர் கொணர்ந்த தீர்மானம் நிறைவேறியது

சேலம், ஜூலை 12—

மேட்டூர் வாய்க்கால் பிரதேசத்தில் ஒருபோகம் நஞ்சையும் மறுபோகமும் புஞ்சையும் பயிரிட வேண்டும் என்ற உத்தரவை மாற்றி, எல்லா போகத்திலும் நஞ்சைப் பயிரையே பயிரிட அனுமதி தரவேண்டும் என்று மாநில அரசாங்கத்தாரை கேட்டுக்கொண்டு சேலம் மாவட்ட ஆட்சி மன்றத்தில் தி. மு. கழக உறுப்பினர் தோழர் ஆர். தாண்டவன் அவர்கள் கொணர்ந்த அவசரத் தீர்மானம் தோழர் கே. கருப்பண்ணன்அவர்களால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது.

8—7—57 மாலை நடைபெற்ற சேலம் மாவட்ட ஆட்சி மன்ற கூட்டத்திற்கு தோழர் டி. எம். காளியண்ணன் தலைமை வகித்தார்.

காவிரியில் இருந்து பம்பு செட்டு மூலம் விவசாயத்திற்குத் தண்ணீர் எடுப்பவர்களுக்கு 'பெனல்டி' (தீர்வை) விதிப்பதை ரத்து செய்ய வேண்டும் என மாநில அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டு தோழர் என். இ. மணி கொண்டு வந்த அவசரத் தீர்மானமும் நிறைவேறியது. (ந.கி.)

சேலம் நகர தி. மு. க.

சேலம், ஜூலை 9—

சேலம் நகர தி. மு. கழகப் பொது உறுப்பினர் கூட்டம் நகர செயலாளர் தோழர் இ. ஆர். கிருஷ்ணன் தலைமையில் சென்ற திங்கள் 30-ந்தேதியன்று நடைபெற்றது.

நகர தி. மு. கழக செயற்குழுவில் காலியாக இருந்த ஆறு இடங்களுக்கு கே. அங்குசம், சிற்றுளி—எ. சுப்பிரமணியம், கே. கே. மகாதேவன், கே. ஆர். சித்தன், பி. கோபாலகிருஷ்ணன், வி. சிவப்பிரகாசம் ஆகிய தோழர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திருவாடானைத் தொகுதி தேர்தல் செல்லாது

தனி நீதிமன்றத்தின் தீர்ப்பு

சட்டசபைக்குத் திருவாடானைத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட கே. ஆர். ஆர். எம். கரியமாணிக்க அம்பலம் (கா. சீ. க.) தேர்தலை செல்லாதென்று தேர்தல் நீதிமன்ற நீதிபதி திரு. ஆர். சௌந்தரராஜன் தீர்ப்பளித்தார்.

தேர்தல் செலவை மனுதாரருக்கு (செலவு தொகை 350 ரூபாய்) தரும்படியும் நீதிபதி உத்தரவிட்டார்.

சுகாதார அதிகாரிகளின் சம்பள உயர்வுக் கோரிக்கை

'இப்போதில்லை' என்ற பல்லவியே நீடிக்கிறது

சென்னை, ஜூலை 10—

சுகாதார அதிகாரிகள் (இன்ஸ்பெக்டர்கள்) தங்களின் சம்பள விகிதங்களை உயர்த்தித் தரவேண்டுமெனக் கேட்டதற்கு, சுகாதார இலாகா மந்திரி மாணிக்கவேலர், 'கோரிக்கை பரிசீலனைக்குரியதுதான் என்றாலும் அதற்கு சர்க்காரின் நிதிக் கஷ்டங்கள் மிகுந்துள்ள இந்த நேரம் தக்க தருணமல்ல' என்று கூறினாராம்.

சுகாதார அதிகாரிகளின் மாநாடு ஒன்றில் பேசிய அவர், 'இப்போது இல்லாவிடினும், குறுகிய எதிர்காலத்திலேனும் உங்களுக்கு ஏதேனும் செய்யப்படும்' என்றும் அவர் கூறினாராம்!

மாநாட்டில் பேசிய சுகாதார இலாகா டைரக்டர் டாக்டர் என். ராசகோபாலன், 'அதிகாரிகளின் கோரிக்கை வெகு நியாயமானதாகும்; சில காலத்திற்குமுன்—அனேகமாக எல்லாத் துறை சர்க்கார் ஊழியர்களுக்கும் சம்பள விகிதம் உயர்த்தப்பட்டது; ஆனால் துரதிருஷ்டவசமாக சுகாதார அதிகாரிகளுக்கு மட்டும் அதிக விகிதம் கிடைக்கவில்லை. இதற்கு, அவர்களுக்காக உரிய முறையில் வாதாட ஆள் இல்லாமற்போனது காரணமாக இருந்திருக்கலாம். எனவே அவர்களின் கோரிக்கையை சர்க்கார் அனுதாபத்துடன் கவனிக்க வேண்டும்' என்று எடுத்துரைத்திருக்கிறார்.

கனவு நனவாகட்டும்!

"கிருஷ்ணா, கோதாவரி நதிகளின் நீரை செங்கற்பட்டு மாவட்டம் வரையில் கொண்டுவர எஞ்சினியர்களும், வேறு சில முக்கியத் தலைவர்களும் சில காலமாக கனவு கண்டு வந்தனர்; கொஞ்சம் அதிருஷ்டமும் திறமையும் நமக்கிருந்தால் இக்கனவை நனவாக்கிவிடலாம்"

—தென்மண்டலக் குழுவில் பண்டித பந்த்.

சென்னை-மாணவர் மன்றம்

"மாணவர் மன்ற வெள்ளி விழா ஜூலைத் திங்கள் 20, 21-ம் தேதிகளில்சென்னையில் சிறப்புற நிகழவிருக்கின்றது. விழாவில் புத்தகக் கண்காட்சி யொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

"தமிழ் நாடெங்கணும் உள்ள கல்லூரிகள், பள்ளிகள் ஆகியவைகளுள் பயிலும் மாணவ மாணவியர்களும் மற்றும் ஆசிரியப் பெருமக்களும், அறிஞர்களும், கலைஞர்களும் கலந்துகொண்டு சிறப்பிக்கும் இவ்விழாவில் இக்கண்காட்சியினை ஓர் அரியவாய்ப்பாகக் கொண்டு நூற்பதிப்பாளர்களும், வெளியிடுவோரும் தங்கள் புத்தகங்களை இடம் பெறச் செய்வது மிகவும் அவசியமாகும் விவரத்திற்கு (மாணவர் மன்றம்; 17, இரத்தின முதலி தெரு, சென்னை-1.) என்ற முகவரிக்கு எழுதவும்" என மேற்படி மன்றத்தார் அறிவிக்கிறார்கள்.

சட்ட சபையில் மு. கருணாநிதி முழக்கம்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

படும் காரணங்களில் மிகமிக முக்கியமான காரணம், 'இங்கு பெரிய ஆறுகள் கிடையாது' என்பதுதான். 'ஒரு சில ஆறுகளுடைய தண்ணீரை கடலில் கலக்காமல் நாங்கள் பார்த்துக்கொள்கிறோம்' என்று அமைச்சர் பெருமக்கள் எடுத்துச் சொன்னார்கள். கடலில் விழுகின்ற காரணத்தால் மட்டும் ஆற்று நீர் வீணாகிவிடவில்லை; வேறு சில காரணங்களாலும் வீணாகப்போகின்றது என்று சட்டநாத கரையாளர் எடுத்துக் கூறினார்கள். அது மாத்திரமல்ல; கடலில் கலக்கின்ற தண்ணீர் தடுக்கப்பட்டால் மாத்திரம் போதாது! ஆற்று நீர் கழனிகளில் பயன்படாத நிலையில் மணலிலேயே சோர்ந்து வீணாகப் போகின்றது என்பதை மறந்து விடக் கூடாது.

"என்னுடைய குளித்தலைத் தொகுதியைப் பற்றி கவர்னர் பெருமானின் உரையின்மீது எழுந்த விவாதத்தில் நான் அமைச்சர் அவர்களுக்கு எடுத்துச் சொன்னேன். 'குளித்தலைத் தொகுதி மிக மிக வளமான தொகுதி' என்று, குளித்தலை, தொகுதியில் தலைநகரில் இறங்கும் ஒருவர் சொல்லலாம். உண்மையில் குளித்தலைத் தொகுதியை—குளித்தலை, மாயனூர், வெள்ளியணை—என்ற மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். ஒருவர் வரிசையாகப் பயணம் நடத்தினால், 'குளித்தலைத் தொகுதி வளமான தொகுதி—எழிலான தொகுதி,' என்று எண்ண ஆரம்பித்து, அடிக் கரும்பை சுவைப்பதுபோல் சுவைத்து, மாயனூர் சென்றால் நடுக் கரும்புக்கு வந்து, பிறகு வெள்ளியணைக்கு வரும்போது நுனிக் கரும்பை சுவைப்பதுபோல் முடியும்.

"வெள்ளியணையில்குடிப்பதற்கு தண்ணீர் இல்லாமல், வரண்ட நிலங்களாக உள்ள பல இடங்களை அங்கே காணமுடியும். குடகனாறு திட்டம் அங்கே தேவை; அத்தகைய குடகனாறு திட்டம் நிறைவேற்றப்படுமானால்10,000ஏக்கரா புஞ்சை நிலங்களை நஞ்சை நிலங்களாக மாற்ற முடியும் என்று 1951-ம் ஆண்டிலிருந்து பெரிய கிளர்ச்சி நடைபெற்று வருகிறது. இந்தக் கிளர்ச்சியை ஏதோ பலாத்காரப் போராட்டம் என்று நான் குறிப்பிடுகிறேன் என்று யாரும் கருதக் கூடாது. அங்கேயிருக்கும் பொது மக்கள்—அதாவது எந்த அரசியல் கட்சியிலும் சார்பற்ற பொது மக்கள்—அந்தக் குடகனாறு திட்டம் தேவை என்றுகூறி, 19—2—51-ல் மராமத்து மந்திரியிடமும், 2—9—1952-ல் நிதி அமைச்சரிடமும், 11—1—1954ல் முதல் அமைச்சரிடமும் அதற்கான மனுக்களைத் தந்து, குடகனாறு திட்டத்தைக் கவனிக்க வேண்டுமென்று எடுத்துச் சொல்லப்பட்டது.

"பழனிமலையிலிருந்து உற்பத்தியாகிற குடகனாறு—ஏறத்தாழ 86 மைல் நீளமுள்ள ஆறு—சுமார் 30 மைல் நீளம் திண்டுக்கல் தாலுகாவில் ஓடி, 1,000 ஏக்கரா நிலத்திற்கு மட்டும் பயன்படுத்தப்பட்டு, அங்கிருந்து மிச்சமுள்ள 56 மைல் நீளம், அதன் தண்ணீர் எல்லாம் வீணாகப்போய் அமராவதியில் கலக்கிறது என்ற நிலைமையில், வேடசெந்தூருக்கு அருகிலுள்ள கல்லார்பட்டி என்ற இடத்தில் ஒரு நீர்த்தேக்கம் அமைத்து, அந்தத் தண்ணீர் அங்கே பயன்படுத்தப்பட சுமார் 23 மைல் நீளமான ஒரு வாய்க்கால் வெட்டப்பட்டால், வெள்ளியணை, வீரவல்லி, ஜெகதாபி, உப்பிடமங்கலம் என்ற பல ஏரிகள் நிரம்பி, 10 ஆயிரம் ஏக்கரா நிலம் அங்கே சாகுபடி ஆகுமென்றும், அதற்கு 12 இலட்சம் ரூபாய் செலவாகுமென்றும், கரூர் பொது மராமத்து இலாகா சூபர்வைசர் அதற்கு ஒரு திட்டமே தயாரித்துக் கொடுத்தார்; அப்படித் தயாரிக்கப்பட்ட அந்தத் திட்டத்தைப் பெற்ற மக்கள் திருச்சி 'எக்ஸிகியூடிவ் என்ஜினியர்' அலுவலகத்திற்கு 22—10—1953-ல், மனு மூலம் தெரிவித்தும், இதுவரை கேட்பாரற்று அந்த மனு அங்கே தூங்கிக் கொண்டிருக்கிறது.

"12 இலட்சம் ரூபாய் செலவு செய்தால், 10 ஆயிரம் ஏகரா நிலம் அங்கே பயன்படும்—புன்செய் நன்செயாக மாறும் என்று சொல்லப்படுகிறது. இந்த நேரத்தில், மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்களுக்கு சபாநாயகரின் அனுமதியின்பேரில் ஒன்று தெரிவிக்க ஆசைப்படுகிறேன்.

"ஆரணியாறுத் திட்டத்திற்கு ரூ. 104·19 இலட்சம் செலவானாலும், பயன்படுகிறநிலங்கள் 5-ஆயிரம் முதல் 7-ஆயிரம் ஏக்காராதான்; இதனால், ஆரணியாறுத் திட்டம் தேவை இல்லை என்று நான் கூறவில்லை. 5,000 முதல் 7,000 ஏக்கரா நிலங்களுக்குப் பயன்படுகிற ஆரணியாறு திட்டத்திற்கு 104·19 இலட்சம் செலவாகும் என்று சொல்லப்படுகிறது. கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத் திட்டத்திற்கு ரூ. 184·03 இலட்சம் செலவாகும் என்றும், அதனால் பயன்பெறுவது 7,500 ஏகர் நிலம் என்றும் சொல்லப்படுகிறது. இப்படி ரூ. 184 இலட்சமும், ரூ 104 இலட்சமும் செலவிட்டு 7 ஆயிரம், 5 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பயன்பெறுகிற நேரத்தில், ரூ. 12 இலட்சம் செலவில் 10 ஆயிரம் ஏக்கர் நிலம் பயன்பெறுகிற ஒரு குடகனாறு திட்டத்தை இதுவரை—இவ்வளவு கோரிக்கைகளுக்குப்பிறகும் -- அந்த வட்டாரத்து மக்கள் அத்தனை பேரும் மனுச் செய்து கொண்ட பிறகும்—மந்திரிகள் வந்தநேரத்தில் அவர்களைத் தூது சென்று பார்த்த பிறகும் கவனிக்கப்படவில்லை என்பது மிகவும் வருந்தத்தக்க ஒன்று.

"மேற்கு நோக்கி ஓடுகிற ஆறுகளை எல்லாம் கிழக்கு நோக்கித் திருப்புவதற்கு முயற்சிக்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. பரம்பிக்குளத்துத் தண்ணீரை தமிழகத்துக்குப் பயன்படுத்திக் கொள்வதற்கு பெருமுயற்சி எடுத்துக் கொள்ளப்படுகிறது என்று சொல்லப்படுகிறதே தவிர, ஆர்வத்துடனும் உற்சாகத்துடனும் அந்தத் திட்டம் கவனிக்கப்பட்டு, பரம்பிக்குளம் தண்ணீர் பயன்பட முயற்சி எடுத்துக் கொள்ளப் படவில்லை.

"இங்கே ஆறுகள் இல்லை; ஆகவே திட்டங்கள் இல்லை என்று கூறுவது, 'ஆடத் தெரியாத ஒருத்தி முற்றம் கோணல' என்று சொல்வதை ஒக்கும் என்று நான் குறிப்பிடுகிறேன். ஆறுகள் இல்லை என்றாலும், இருக்கிற ஆறுகளையாவது பயன்படுத்துகிற அத்தகைய எண்ணம் ஏன் பிறக்கவில்லை என்று நான் கேட்கிறேன்,

"புராணத்திலே படித்தது உண்டு—'பகீரதனுக்காக பரமசிவன் ஆகாயத்திலிருந்து கங்கையை வரவழைத்தான்,' என்று! அப்படியிருக்க, பச்சைத் தமிழர் ஆட்சியில் பரம்பிக்குளம் தண்ணீரைத்தானா வரவழைக்க முடியாது? கொஞ்சம் எடுத்துப் பேசினால் — உற்சாகத்தோடும் அக்கறையோடும் அந்த வேலையில் ஈடுபட்டால், ஆகாத காரியமா இது?-என்று நான் கேட்கிறேன்.

"திட்டங்கள் பல இருக்கின்றன; அவைகள் நிறைவேற்றப்படவேண்டும். நிறைவேற்றப்படக்கூடிய திட்டங்கள் இவ்வளவு காட்டியும்கூட, அவைகளை நீங்கள் ஏற்றுக்கொள்ளவில்லையே என்று எதிர்க்கட்சிக்காரர்களைப் பார்த்துச் சொன்னால், அந்தத் திட்டங்கள் உடனடியாக நிறைவேற்றப்படவேண்டும். குடகனாறு திட்டம் அவசர அவசியமாக நிறைவேற்றப்பட வேண்டும் என்றே சொல்ல விரும்புகிறேன்.

வெள்ளியணைப் பகுதியில் சென்று மந்திரி அவர்கள் சுற்றிப் பார்த்தால் அங்கு இருக்கும் அவல நிலை தென்படும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். குளித்தலை வட்டாரத்தில் 273 குளங்கள் இருக்கின்றன. அந்த 273 குளங்களும் மழையை நம்பித்தான் நிறைய முடியும். அந்த 273 குளங்களில் வரும் மழைத் தண்ணீரைக்கொண்டு பெரும் பகுதி நிலத்தை நல்ல முறையிலே வளப்படுத்த முடியும். அதற்கான முயற்சிகளும் இந்த அரசாங்கத்தாரால் எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று நான் கோருகிறேன்.

"திட்டங்களைக் கூறிவிடுவதால் மட்டும் போதாது; அந்தத் திட்டங்களை நிறைவேற்றுகிற ஆற்றலும் அத்தகைய திறமையும் ஒரு அரசு பெற வேண்டுமேன்றும், அப்படிப் பெற வேண்டிய நிலையைத்தான் வள்ளுவர் அவர்கள் 'கொடுங்கோன்மை' அதிகாரத்தில் அல்ல—'அமைச்சு' என்ற அதிகாரத்தில் மிக அழகாக எடுத்துச்சொல்லுகிறார்.

"முறைபடச் சூழ்ந்து
முடிவிலவே செய்வர்
திறப்பா டிலா தவர்"

"நல்ல திட்டங்களைப் போட்டாலுங்கூட, அந்தத் திட்டங்களை முறையாக எண்ணினாலும்கூட, அந்தத் திட்டங்களை மூளியாகச் செய்து முடிப்பார்கள் திறமை இல்லாதவர்கள் என்று கூறியிருக்கிறார்.

"நான் இந்த அரசாங்கத்தை, அப்படிச் செய்வார்கள் என்று கூறவில்லை; அப்படிச் செய்யக்கூடாது என்றுதான் கூறுகிறேன். நாம் குறளை எடுத்துக்கூறினால், வல்லினம், மெல்லினம் தெரியாதவர்கள் குறள் பற்றிப் பேசுகிறார்கள் என்று கூறிவிடலாம், அமைச்சர் அவர்கள்! வல்லின—மெல்லினம் தெரிகிறதோ இல்லையோ நான் சார்ந்த இனம் தமிழினம்—திராவிட இனம் என்பதை உணர்ந்திருக்கிறேன். அதை உணராதவர்களுக்கு அதை உணர்த்தி, இந்த நீர்ப்பாசனத் திட்டங்கள் தமிழகத்திற்கு உள்ளபடியே பயன்படுவதற்கு சென்னை மாநில அரசு உடனடியாக வேலை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்."

சென்னை—ஆந்திராவுக் கிடையே உள்ள எல்லைத் தகராறு பற்றி முடிவுசெய்ய மத்திய அரசாங்கம் நியமிக்கப்பட்ட படாஸ்கரின் அறிக்கை ஜூலை 20-ந் தேதிக்குள் இறுதியாகத் தயாராகிவிடுமாம்.

வண்ணை தமிழ் இளைஞர் கழகம்

14—7—57 காலை 10 மணிக்கு சென்னை—வண்ணை தனலட்சுமி உயர்தர ஆரம்பப் பள்ளியில், வித்துவான்-இரா. த. வேணுகோபால் அவர்கள் திருக்குறளில் கூடா ஒழுக்கம் எனும் அதிகாரத்தை விரித்துரைப்பார்.

சென்னை-11வது வட்ட தி. மு. க. செயற்குழு உறுப்பினர்களுக்கு:

14—7—57 காலை 9 மணிக்கு மேற்படி செயற்குழுக் கூட்டம் நடைபெறும்; வரவு-செலவு கணக்குத் தணிக்கை—கழக வளர்ச்சி முதலியவை பற்றி ஆராயப்படும்.

அண்ணா

அவர்களுக்கு

திண்டிவனம்

நகர மன்ற வரவேற்பு

★

14—7—57 ஞாயிறன்று திண்டிவனத்திற்கு வருகை தரும் **அண்ணா** அவர்களுக்கு, திண்டிவனம் நகரசபையினர் அன்று மாலை 4-மணி அளவில், ஓர் வரவேற்பு அளிப்பர். நகரசபைத் தலைவர் வி. கோபால கவுண்டர் அவர்கள் தலைமை தாங்குவார்.

கழகக் கூட்டங்கள்

★

பரமக்குடி:
(இராமநாதபுரம் மாவட்டம்)
பெருமாள் கோவில் முன்பு
16—7—57 இரவு 7 மணிக்கு
தலைவர்:
இ. ல. ம. சௌந்தரபாண்டியன்
பேசுவோர்:
இரா. நெடுஞ்செழியன்
நாகலிங்கம்
ஏ. செல்லச்சாமி
சி. வி. எம். சாமி
எஸ். நித்தியானந்தம்
எம். ஆர். எஸ். மணி

★

ருெ. 85 ஆர். குமாரபாளையம்:
(சேலம் மாவட்டம்)
அண்ணா திடலில்
16—7—57 மாலை 4 மணிக்கு
தி. மு. கழகத் துவக்க விழா
தலைவர்: பி.சின்னண்ணன்
பேசுவோர்:
என். வி. நடராசன்
ஜி. பி. சோமசுந்தரம்
சிற்றுளி-சுப்பிரமணியம்
கே. வி. கே. இராமசாமி
ஏ. சித்தையன்

★

குப்பம்:
15—6—57 இரவு 7 மணிக்கு
தி. மு. கழகத் துவக்கவிழா
தலைவர்: ஓ. எஸ் இராமசாமி
பேசுவோர்:
கன்னிவாடி-பெரியார்
மேடை சிதம்பரனார்
என். இரத்தினம்
மு. குழந்தைவேல்
எம். கே. கரிகாலன்
சண்முகம்
வி. கே. இராமசாமி

★

சின்னாளப்பட்டி:
(மதுரை மாவட்டம்)
வள்ளுவர் திடலில்
16—7—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: வி. எஸ். எஸ். மணி
பேசுபவர்:
நாஞ்சில் மனோகரன்

★

துகிலி—கஞ்சனூர்:
16—7—57 மாலை 6 மணிக்கு
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
என். கிட்டப்பா
பொ. தருமன்
கோ. சி. மணி

சென்னை—தூளை நகர இளைஞர் கழகம்

13-7-57 மாலை 6-30 மணிக்கு 10, மாணிக்க செட்டித் தெரு கழகப் பணிமனையில், தோழியர் இரா. தேவகி தலைமையில் புலவர் தோழியர் சி. குழந்தையம்மாள் எம். எல். ஏ. அவர்கள் 'தமிழ் மகளிர்' என்ற தலைப்பில் பேசுவார்.

சென்னை—வண்ணை மஜீத் மன்ற பொது உறுப்பினர்களுக்கு:

14—7—57 இரவு 8-30 மணி அளவில், சென்னை — வண்ணை, எண்-1, சுப்பம்மாள் தெரு மன்றக் கட்டிடத்தில் மேற்படி பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்; பல முக்கியப் பிரச்சினைகள் குறித்து ஆராயப்படும்.

மறுமலர்ச்சி நூல்நிலைய

ஆண்டு விழாவும் — மும்முனைப் போராட்ட நினைவு நாள் கூட்டமும்

15—7—57 மாலை 6 மணிக்கு, சென்னை—மவுண்ட்ரோடு மறுமலர்ச்சி நூல் நிலையத்தின் 6-ம் ஆண்டு விழாவும்—மும்முனைப் போராட்ட நினைவு நாள் பொதுக் கூட்டமும், அப்பாவு கிராமணி தெருவில், தோழர் மு. ர. குமார் தலைமையில் நடைபெறும்; தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., கண்ணதாசன், வி. எஸ். கோவிந்தராசன் ஆகியோர் பேசுவர். விழாவில், கைத்தறி வார விழா-வில் அண்ணா அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் ஒலிப் பதிவு ஒலிபரப்பப்படும்; தோழர் டேப் - இராதாமாணிக்கம் இன்னிசை வழங்குவார்.

விருதையில்

சி. பி. சிற்றரசு

நிகழ்ச்சிகள்:

14—7—57 காலை 9 மணிக்கு எம். எஸ். பெரியசாமி படிப்பக 4-வது ஆண்டு விழா, படிப்பகத்தின் முன்பு தோழர் மு. கிருட்டினன் தலைமையில் நடைபெறும்; தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் 'மதமும்—பகுத்தறிவும்' என்ற பொருள் பற்றி சிறப்புரை நிகழ்த்துவார்.

மாலை 5 மணிக்கு விருதை எம். எஸ். பெரியசாமி நகராட்சி பஸ் நிலையத்தின் முன்பாக தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் கொடியேற்றுவார்.

இரவு 8 மணிக்கு அம்மன் கோவில் பொட்டலில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறும்; தோழர்கள் சி. பி. சிற்றரசு, எஸ். இரத்தினம், பாஸ்கரன், அரங்கநாதன் மற்றும் பலர் பேசுவார்கள்.

கி. மனோகரன், எஸ். முத்து

சுற்றுப்பயணம்

ஜூலை
14 : மதுரை காலை: சிறப்புக் கூட்டம்
மாலை: பொதுக்கூட்டம்
15 : கல்லணை
16 : கட்டிக்குளம்
(மானாமதுரை பகுதி)

சொற்பயிற்சிக் கூட்டங்கள்

14—7—57 மாலை 6 மணிக்கு காட்டுமன்னார்குடி - சத்தியவாணி முத்து சொற்பயிற்சி மன்ற அலுவலகத்தில், மன்றத்தின் 2-வது கூட்டம் நடைபெறும்; தோழர்கள் பலர் 'ஏன் வேண்டும் இன்பத் திராவிடம்' என்பது பற்றி பேசுவர்.

* * *

14—7—57 காலை 9 மணியளவில், கோடம்பாக்கம்-50/3, ஆற்காட்டுச்சாலையில், கழகப் பணிமனையில் தோழர் குமார் தலைமையில், 'இலங்கைத் தமிழர் நிலையும்—இந்தியப் போரசும்' என்பது பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

சென்னை--தூளை தி. மு. க. பொது உறுப்பினர்களுக்கு:

14—7—57 மாலை 4 மணிக்கு மேற்படி கிளையின் பொது உறுப்பினர்கள் கூட்டம், தூளை—கலியாணமேஸ்திரி தோட்டம், கே. வி. கே. சாமி படிப்பகத்தில், சென்னை மாவட்ட தி. மு. கழகத் துணைச்செயலாளர் கோ. செங்குட்டுவன் தலைமையில் நடைபெறும்; அதுபோது, காலியான செயற்குழு தேர்வும், பொருளாளர் தேர்வும், மாவட்டப் பிரதிநிதி தேர்வும் மற்றும் சில முக்கிய பிரச்சினைகளும் ஆய்வுக்கு வரும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா நெடுஞ்செழியன் எம்.ஏ